DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT NO.I, ERODE

**S.T.C. No.404/2022** **Date : 04.03.2023**

**Prosecution Witness - (PW2)**

**Name** : **எஸ்.எம்.நாராயணன்** Caste :

Father's Name : Calling:

Village : Religion:

Taluk : Age :

புகார்தாரர் ஆஜர், எதிரி ஆஜர்.

சாட்சிக்கு சத்தியபிரமானம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை

என் பெயர் எஸ்.எம். நாராயணன், நான் குமாரபாளையம் கிளை, கரூர் வைஸ்யா வங்கி கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன்.

சேகரன் என்பவர் எங்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். அந்த வங்கிகணக்கு எண். 1147155000020491 ஆகும். மேற்படி சேகரன் என்பவரின் கணக்கு தொடக்க படிவத்தின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **பு.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சேகரன் என்பவருக்கு காசோலை எண்.000131 முதல் 000140 வரை காசோலை புத்தகம் 18.12.2015 அன்று வழங்கப்பட்டுள்ளது. காசோலை எண்.000134 என்ற காசோலை சரவணன் பெயரில் 16.08.2022 அன்று வசூலுக்கு வந்துள்ளது. மேற்படி காசோலை refer to drawer not arranged for என திருப்பப்பட்டுள்ளது.

2. மேற்படி வங்கிகணக்கு 2 வருடத்திற்கு மேல் வரவு செலவு செய்யாமல் செயல்படாத நிலையில் இருந்ததால் refer to drawer not arranged for என திருப்பப்பட்டுள்ளது. மேற்படி வங்கிகணக்கின் 01.04.2022 முதல் 13.04.2022 வரை கணக்கு பட்டியல் தாக்கல் செய்கிறேன். அது **பு.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காசோலை எண்.000134 என்ற காசோலை வசூலுக்கு வந்த பொழுது அவரது கணக்கில் '0' இருப்பாக இருந்தது.

Judicial Magistrate,
Fast Track Court No.I,
Erode.

**Name : எஸ்.எம்.நாராயணன் - PW2**

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**

வங்கி கணக்கு தொடக்க படிவத்தை எதிரி சேகரன் தான் பூர்த்தி செய்துள்ளார் என்றால் முதல் பக்கத்தை சேகரன் தான் பூர்த்தி செய்துள்ளார், கையெழுத்தும், பூர்த்தி செய்த கையெழுத்தும் ஒரே மாதிரியாக உள்ளது. செயல்படாத கணக்கு என எதிரிக்கு வங்கியில் இருந்து தகவல் கொடுக்கப்பட்டதா என்றால் SMS, மெயில் அனுப்புவது வழக்கம். சேகரன் என்பவர் மொபைல் எண்ணும், இ.மெயில் ID கொடுக்காததால் அவருக்கு செயல்படாத கணக்கு குறித்து தகவல் கொடுக்கப்பட்டதாக ஆவணங்கள் உள்ளது.

2. மேற்படி பதிவேட்டினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தலைமை அலுவலகத்தில் கேட்டு பெற்று தாக்கல் செய்யமுடியும்.

ஒம்/- சாட்சி : **எஸ்.எம்.நாராயணன்**

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம் எண்.1
ஈரோடு.